# 54

# நாம் வெற்றி அடைய ஐந்து காரணங்கள்!

## (17:14-18)

*வெற்றி* என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆய்வுக் கருத்தாக உள்ளது: நாம் தேவனுடன் நிலைத்து நின்றால், நாம் வெற்றி பெறுகின்றோம்! 17:14 தான் இதை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தும் வசனம் என்று சிலர் நம்புகின்றனர்: "இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தாவும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால்[1] அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்.'' ''ஜெயிப்பார்'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது - "வெற்றி" என்பதற்கான *nike* என்ற வார்த்தையின் வினை வடிவமாக உள்ளது.

இந்த வெற்றியானது சிறிய வெற்றியாக இருப்பதில்லை. கிறிஸ்தவத்தின் விரோதிகள் விரிவாக, நரம்பை அதிரச் செய்யும் வகையில்கூட, விவரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். 12ம் அதிகாரம் வலுசர்ப்பத்தை அறிமுகப்படுத்துகையில், அதன் இரண்டு கூட்டாளியான இரண்டு மிருகங்களைப் பற்றி 13ம் அதிகாரம் கூறிற்று. வலுசர்ப்பத்தின் மூன்றாவது கூட்டாளியான பாபிலோன், அந்த நாட்களில் மகா வேசியாயிருந்த ரோமாபுரி நகரத்தைப் பற்றி 17ம் அதிகாரமானது ஒளிவீசும் வண்ணங்களுடன் சித்தரித்திருந்தது.

பாபிலோனின் செல்வாக்கு தொலைதூரம் சென்றடைந்திருந்தது. 17:15ல், வேசியானவள் அமர்ந்து இருந்த திரளான தண்ணீர்கள் என்பது "ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரரும்" - இது உலகத்தின் சகல மக்களையும் குறித்தது - என்று தூதன் கூறினார்.

> வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தின்போது … ரோமாபுரியானது தனது மாபெரும் தன்மையின் உச்சத்திற்கு அருகில் இருந்தது. அதன் எல்லைகள் பிரிட்டிஷ் தீவுகளில் இருந்து ஆப்பிரிக்க பாலைவனம் வரையிலும், அட்லாண்டிக் கடலில் இருந்து ஐப்பிராத்து நதி வரையிலும் விரிவடைந்து இருந்தன … . அந்த நாட்களில் இருந்த மக்களுக்கு, ரோமாபுரியே முழு உலகம் என்பதாகக் காணப்பட்டது.[2]

*17:18ல் பாபிலோன், ''பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரம்'' என்று விவரிக்கப்பட்டது. அவர்கள் "பத்து ராஜாக்களாம்; ... இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள். இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள்'' என்று தூதன் கூறினார் (17:12-14அ).*

*இங்கு குறிப்பிடப்பட்ட யுத்தம், முன்னதாகக் கலந்துரையாடப்பட்ட ''யுத்தமாக'' இருக்கக்கூடும்,[3] ஆனால் இது பெரும்பாலும், 12:17ல் குறிப்பிடப்பட்ட போராட்டமாக இருக்கவே வாய்ப்பு அதிகம் உள்ளது.[4] அங்கு சலிப்புற்ற வலுசர்ப்பம் ''தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய ... மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று.'' வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இது நன்மைக்கும் தீமைக்கும் இடையில் தொடர்ந்து நடைபெறுகிற ஒரு யுத்தமாக, நாம் ஒவ்வொருவரும் ஈடுபட்டுள்ள யுத்தமாக உள்ளது.[5]*

*ஆண்டவருக்கு விரோதமாக அணிவகுத்து நிற்கும் சக்திகளை உங்கள் சிந்தையில் நீங்கள் சித்தரித்தால், ''ஆட்டுக்குட்டியானவர் அவர்களை ஜெயிப்பார்'' என்ற வார்த்தைகளை நீங்கள் சிறந்த வகையில் மதிப்பிட முடியும். இது முக்கியத்துவமற்ற வெற்றியாக இருப்பதில்லை என்று மறுபடியும் நான் கூறுகின்றேன்!*

*இந்த வெற்றியில் பல காரணிகள் அடங்கியுள்ளன, ஆனால் நமது வசனப்பகுதியினால் கருத்தாகத் தெரிவிக்கப்படும் ஐந்து காரணிகளை மாத்திரம் முக்கியத்துவப்படுத்தி எடுத்துரைக்க நான் விரும்புகின்றேன்: நாம் வெற்றி அடைய ஐந்து காரணங்கள்!*

## இயேசு தமது இரத்தத்தைச் சிந்தியதால் நாம் வெற்றி அடைகின்றோம் (17:14)

*''ஆட்டுக்குட்டியானவர் அவர்களை ஜெயிப்பார்'' என்று நமது வசனப்பகுதி கூறுகிறபோது, 5ம் அதிகாரத்தில் ஆட்டுக்குட்டியானவருக்கு நமது அறிமுகப்பகுதி என் நினைவிற்கு வருகிறது: ''அப்பொழுது அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும் ... மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன்'' (வசனம் 6அ). அது திரும்பவும் எனக்கு, 12ம் அதிகாரத்தில் பெரிய சர்ப்பமான சாத்தானுடைய தோல்விக்காட்சியை எனக்கு நினைவூட்டுகிறது: "அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: ... இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். ... (அவர்கள்) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் ... அவனை ஜெயித்தார்கள் ... என்று சொல்லக் கேட்டேன்" (வசனங்கள் 10, 11ஆ). கூடுதலாக எந்தக் காரணிகள் இருந்தாலும், கடைசியில் வெற்றியானது "ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலேயே" பெறப்படுகிறது என்ற*

*உண்மையின்மீதான கண்ணோக்கத்தை நாம் ஒருக்காலும் இழந்துபோய் விடக்கூடாது. F. W. ஃபார்ரர் என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

> *... எல்லாராலும் எதிர்க்கப்பட்ட நிலையில், கிறிஸ்தவம் வெற்றியடைந்தது ... . கல்லறையானது கிரேக்க கோவில்களின்மீது வெற்றி சிறந்தது; அவமானத்தின் சிலுவையானது திராட்சரசக் கோப்பைகள் ... விருந்துகள்மீது வெற்றிசிறந்தது, ... உலகின் மோசம்போக்கும் சிறந்த கொள்கைகள் மற்றும் விஷமூட்டும் சந்தோஷங்கள், உலகின் மதிமயக்கும் புராணத்துவ மூடநம்பிக்கைகள் மற்றும் ஒழுக்கங்கெட்ட மதங்கள் ... யாவும் மரத்தினால் ஆன ஒரு சிலுவையின் முன்னால் பறந்தோடின! ஆம், என் சகோதரரே, தமது பின்பற்றாளர்களைப் பலவீனத்தில் பலப்படுத்திப் பூரணப்படுத்தியவரான இந்த உலகத்தின் உண்மையான அரசருடைய இரத்தம் வழிந்தோடும் கரங்களினால் சிலுவை பற்றிப்பிடிக்கப்பட்டபடியால்; மற்றும் அது உயர்த்தப்பட்டபடியால், அவர் தம்மிடத்திற்கு எல்லா மனிதரையும் இழுத்துக்கொண்டார்.*[6]

## பாவம் என்பது சுய அழிவுத்தன்மையுள்ளதாக இருப்பதால் நாம் வெற்றி அடைகின்றோம் (17:16)

*நமது வெற்றிகரமான இன்னொரு காரணி, 16ம் வசனத்தில் காணப்படுகிறது. இவ்வசனம் முதலில் "மிருகத்தின் ... பத்து கொம்புகள்" பற்றிக் குறிப்பிடுகிறது. "பத்து கொம்புகள்" என்பது அனேகமாக, அந்த வேசியினால் மோசம்போக்கப்பட்டு (17:2), மிருகத்திற்குத் தங்கள் பற்றுறுதியைச் செலுத்தியிருந்த (17:12, 13) அந்த அரசர்களாய் இருந்திருக்கலாம்.*[7] *பாபிலோன் என்பது மிருகத்தின்மீது அமர்ந்து இருந்ததாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது (17:3). இது அந்த அரசர்கள், மிருகத்தின்மீதும் வேசியின்மீதும் சார்ந்திருப்பதை வலியுறுத்துகிறது.*

*பின்பு 16ம் வசனம் மகுடம் சூடிய அந்த அரசர்களும் மிருகமும் பெண்ணுக்கு (வேசிக்கு) எதிராகத் திரும்புவார்கள் என்ற திகைக்க வைக்கும் கூற்றை ஏற்படுத்துகிறது:*[8] *"அவர்களின் முந்திய ஒப்புக்கொடுத்தலில் அவர்கள், சாத்தானுக்குரிய வகையில் பகுத்தறிவற்றவர்களாக இருந்தது போலவே, அவர்கள் தங்களை ஒருகாலத்தில் வசப்படுத்தியிருந்த வேசியின்மீது கோபமாய்த் திரும்பினர் ... ."*[9] *அவர்கள் "அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி,*[10] *அவளுடைய மாம்சத்தைப்*[11] *பட்சித்து,*[12] *அவளை நெருப்பினால்*[13] *சுட்டெரித்துப் போடுவார்கள்."*[14]

*(புத்தகத்தின் இந்தப்) பக்கத்தில் இருந்து வெறுப்புணர்வு பற்றி எரிகிறது. அரசர்களும் மிருகமும் தங்கள் முன்னாள் நாயகியைக் கொலைசெய்ததுடன் திருப்திடையவில்லை. அவளை அவமதித்தல் என்பதே அவர்களின் விருப்பமாய் இருந்தது. முழுமையான அழிவு என்பதைக் காட்டிலும் குறைவான ஏதொன்றில் அவர்கள் திருப்தியடையமாட்டார்கள். இது திகைக்கச் செய்யும் கொலைக்காட்சியாக இருக்கிறது.*[15]

இந்த வார்த்தைகள், ரோமாபுரி நகரத்தின் அழிவை விவரிக்கும் 18ம் அதிகாரத்தின் முன்கண்ணோட்டமாக உள்ளன. 2ம் வசனத்தில் தூதன் யோவானுக்கும் "மகாவேசிக்கு வருகிற ஆக்கினையை" காண்பிக்கப் போவதாகக் கூறினார். இது எவ்வாறு நடக்கும் என்பது பற்றிய ஒரு முன்கண்ணோட்டத்தை அப்போஸ்தலருக்குத் தருதல் என்பதே 16ம் வசனத்தின் நோக்கமாக இருந்தது: கடைசியில், அவளது கூட்டாளிகளே அவளுக்கு எதிராக திரும்புவார்கள்.

> பலதரப்பட்ட மக்களை ஒன்றாக இணைத்துவைக்க முடியாமை என்பதே ரோமாபுரியின் பெரிய பலவீனமாக இருந்தது. ரோமாபுரியானது பலத்தினால் வெற்றிகொள்ளவும் கட்டுப்பாடு செலுத்தவும் முடிந்திருந்தது. ஆனால் வெற்றிகொள்ளப்பட்ட வர்களை ஒரேவகையான இராஜ்யமாக இணைத்துக் கட்டியெழுப்பும் இணைப்புத்திறன் அதனிடத்தில் இல்லாது போயிற்று. இந்த பலவீனமானது நேபுகாத்நேச்சாருக்கு வந்த கனவில், வரவிருந்த நான்காவது மாபெரும் இராஜ்யத்தை அவன் கண்டபோது வெளிப்படுத்தப்பட்டது, ரோமாபுரியானது "கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால், அந்த இராஜ்யம் ஒருபங்கு பலமும் ஒரு பங்கு உடைந்ததுமாயிருக்கும் ... களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல் அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்" [தானியேல் 2:42, 43; ASV].[16]

முந்திய பாடத்தில், வேசியுடனும் மிருகத்துடனும் அரசர்கள் வைத்திருந்த கூட்டு உடன்படிக்கையானது உண்மையான பிரியத்தினால் ஏற்பட்டதல்ல, ஆனால் சுய ஆர்வத்தினால் தூண்டப்பட்டது என்று நான் உறுதிப்படுத்தியிருந்தேன். அதைப்போன்ற அரசியல் கூட்டு உடன்படிக்கைகளை நாம் யாவரும் கண்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட தோழமைகள், தொடக்கத்தில் இருந்தே ஆட்டம் காண்பவைகளாக மற்றும் கூட்டாளிகள் என்று அழைக்கப்படுபவர்கள் ஒருவர் மற்றவரின் தொண்டையை நெறிப்பதில் முடிபவைகளாக உள்ளன.

16ம் வசனத்தைப் பல எழுத்தாளர்கள் நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்கின்றனர். சிலர் ரோமாபுரி நகரத்தின் பெரும்பான்மையான பகுதி தீப்பற்றி எரியக் காரணமாயிருந்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட நீரோவைச் சிலர் குறிப்பிடுகின்றனர். மற்றவர்கள், 400களில் அந்த நகரத்தை மிதித்துப்போட்ட காட்டு மிராண்டிகளின் படைகளைக் குறிப்பிடு கின்றனர். ஹென்றி ஸ்வீட் என்பவர், "(ரோமாபுரிப் பேரரசின்) சரிவு மற்றும் வீழ்ச்சியைப் பற்றிப் படிக்கும் எந்த ஒரு வாசகரும், பரிசுத்த யோவானின் தீர்க்கதரிசனத்தினுடைய பொதுவான நடையை உடனடியாக விவரித்து நியாயப்படுத்தும் பாடக்கருத்துகளை இழந்திருக்க முடியாது"[17] என்று எழுதினார். இந்த வசனத்தை நாம் நேரடி அர்த்தமாக எடுத்துக் கொண்டாலும் இல்லாவிட்டாலும், ரோமாபுரியின் பாவம் கடைசியில் அதைப்பிடிக்கும் என்பதே இவ்வசனப்பகுதியின் போதனையாக உள்ளது.[18]

அது (ரோமாபுரி) தனது நண்பர்கள் என்று நினைத்திருந்தவர்களைச் சார்ந்திருக்க இயலாத நிலைக்கு தள்ளப்படும்.

விளக்கவுரைகளின் குவியல்களுக்கு இடையில் நான் கடந்து சென்றபோது, ஒரு சொற்றொடரானது ஏறக்குறைய சோர்வூட்டும் வகையில் திரும்பத் திரும்பத் தோன்றியது: ஒவ்வொரு பாவமும் "தனது சுய அழிவிற்கான விதைகளை" சுமந்திருக்கிறது என்று விளக்கவுரையாளர்கள் யாவரும் தவறாமல் வலியுறுத்தினர். இந்தக் கொள்கையானது 16ம் வசனத்தினால் விவரிக்கப்படுகிறது. முடிவில், துன்மார்க்கம் சுய அழிவடைகிறது. தாவீது, "பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே; ... அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, ... போவார்கள்" என்று எழுதினார் (சங்கீதம் 37:1, 2அ). நமக்கு இந்தக் கண்ணோட்டக் கருத்து தரப்படும்போது, துன்மார்க்கமானது அச்சுறுத்தக்கூடியதாகத் தோன்றுவதில்லை.

## தேவன் கட்டுப்பாடு செலுத்துவதால் நாம் வெற்றி அடைகின்றோம் (17:17)

வெற்றியைப் பற்றி நாம் தைரியமாய் இருப்பதற்கு இன்னொரு காரணத்தை 17ம் வசனம் தருகிறது. இவ்வசனமானது வெளிப்படுத்தின விசேஷத்தில், சிந்தனையை மிகவும் தூண்டுகிற வசனங்களில் ஒன்றாக உள்ளது: "தேவன் தம்முடைய வார்த்தைகள்[19] நிறைவேறுமளவும், அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கும் ஒரே யோசனையுள்ளவர்களாயிருந்து, தங்கள் ராஜ்யத்தை மிருகத்திற்குக் கொடுக்கிறதற்கும் அவர்களுடைய இருதயங்களை ஏவினார்." பத்து ராஜாக்களும் "ஒரே யோசனையுள்ளவர்களாய் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்" என்று முன்பே கூறப்பட்டிருந்தது (17:13). இப்போது 17ம் வசனமானது, தேவன் *தமது* நோக்கத்தை நிறைவேற்றுவற்கு, *தமது* வார்த்தைகள் நிறைவேறுவதற்கு, இதைச் செய்யும்படியான யோசனையை "*அவர்களுடைய இருதயங்களில் இடுவார்*" என்று கூறுகிறது. தேவனுடைய விரோதிகள் "மனவிருப்பமற்று மற்றும் யோசனையற்று"[20] செய்த ஒவ்வொரு விஷயமும் கடைசியில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேறச்செய்தது.

இது ஒரு திகைப்புக்குரிய கருத்தாக இருப்பதில்லையா? மிருகத்துடன் ராஜாக்கள் கொண்டிருந்த கூட்டு உடன்படிக்கையானது கிறிஸ்துவத்திற்கு அழிவைத் தருவதாக காணப்படும், ஆனால் அந்தக் கூட்டு உடன்படிக்கையானது, மிருகமும் ராஜாக்களும் பாபிலோனுக்கு எதிராகத் திரும்பி அதை அழித்துப்போட வழி ஏற்படுத்தியது என்று 17ம் வசனம் கூறுகிறது.

தேவன் இதை அந்த ராஜாக்களின் இருதயங்களில் ஏவியது எவ்வாறு என்றோ அல்லது தேவன் அவர்களைக் கட்டுப்படுத்தியது எவ்வாறு என்றோ விளக்கும்படி என்னிடத்தில் கேட்காதீர்கள். அது எனக்குத் தெரியாது, ஆனால் அவர் அவ்வாறு செய்தார் என்று விசுவாசத்தினால் நான் ஏற்றுக்

*கொள்கின்றேன். தேவன் தமக்கு எதிராக ஆதாரமூலங்களைக் குவித்துள்ள நாடுகளின்மீதுகூடக் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதைக் காண்பிப்பதற்கு வேதாகமத்தில் விவரிப்புகள் நிறைந்துள்ளன. ஹோமர் ஹெய்லி என்பவர் பின்வருமாறு கூறினார்,*

> *தேவன் "தம் சித்தத்தைச் செய்யும்படியான எண்ணத்தை அவர்கள் இருதயங்களில் வைத்தது" எவ்வாறு என்று கேட்பது வீணானதாக உள்ளது; இது அவர் மாத்திரமே அறிந்த விஷயமாக உள்ளது. வரலாறு முழுவதிலும் தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மனிதர்களையும் நாடுகளையும் பயன்படுத்தினார் என்பதை வேதவசனம் தெளிவாக வெளிப்படுத்துகிறது. கிதியோனின் நாட்களில் மீதியானியரின் நாட்டில் நடந்ததுபோல் (நியாயாதிபதிகள் 7:22), மற்றும் சவுலின் நாட்களில் பெலிஸ்தரின் நாட்டில் நடந்ததுபோல் (1 சாமுவேல் 14:20), ஒரு நாடானது தனக்கு எதிராகவே போராடும்படி அதைத் திருப்பிவிட அவரால் முடியும். சேயீர் மலைக்கு எதிராக மோவாப் மற்றும் அம்மோன் ஆகியோரின் யுத்தத்தில், யூதாவின் படையினர் பட்டயத்தை எடுக்காமலேயே, யோசோபாத் இராஜாவுக்குத் தேவன் வெற்றியைக் கொடுத்தார் (2 நாளாகமம் 20:23).[21]*

*தானியேல் தீர்க்கதரிசி, ''உன்னதமானவர் மனுஷருடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார்" என்று கூறினார் (தானியேல் 4:17). அந்த சத்தியம், வெளிப்படுத்தின விசேஷத்தில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது - ஆனால் நாம் இப்போது படித்துக்கொண்டிருக்கும் வசனப்பகுதியைக் காட்டிலும் தெளிவாக இதை வேறு எந்த வசனப்பகுதியும் உரைப்பதில்லை!*

## *இயேசு எல்லாருக்கும் ஆண்டவராக இருப்பதால் நாம் வெற்றி அடைகின்றோம் (17:14)*

*நாம் கூறியுள்ள ஒவ்வொரு விஷயமும் 14ம் வசனத்தின் திறவுகோல் சிந்தையுடன் உறவுபடுகிறது: "ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தாவும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்" (வசனம் 14ஆ, இ)! 19ம் அதிகாரத்தில், இயேசு வெற்றிகொள்வதற்காக முன்னோக்கிப் பயணிக்கையில், அவரது அங்கியில் பின்வரும் நாமம் பொறிக்கப்பட்டிருக்கும்: **"ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா"** (வசனம் 16).[22] கிறிஸ்துவின் ஆளுகையைப் பற்றி நெப்போலியன் பின்வருமாறு கூறினார்,*

> *நீங்கள் பேரரசுகளைப் பற்றியும், அதிகாரத்தைப் பற்றியும் பேசுகின்றீர்கள். நல்லது, மகா அலெக்சான்டர், ஜூலியஸ் சீஸர், சார்லமெகன் மற்றும் நான் ஆகியோர் பேரரசுகளைத் தோற்றுவித்தோம், ஆனால் அவற்றை நாங்கள் எதன்மீது தோற்றுவித்தோம்? வல்லமை. கிறிஸ்து தமது பேரரசை அன்பின்மீது தோற்றுவித்தார், மற்றும் இந்தக் கணத்தில், பல லட்சக்கணக்*

> *கானவர்கள் அவருக்காக மரிக்கத் தயாராக இருக்கின்றனர் ... . படையையோ பாதகையையோ அல்லது படையினரின் அணிவகுப்பையோ நான் காண்பதில்லை; இருப்பினும் அங்கு ஒரு இரகசியமான வல்லமை இருக்கிறது, அது கிறிஸ்தவத்தின் மீதுள்ள ஆர்வத்தில் செயல்படுகிறது - மனிதர்கள் காணப்படாத மாபெரியவர் மீதுள்ள பொதுவான விசுவாசத்தினால் இங்கும் அங்குமாக இருந்த போதிலும், நிலைநிற்கின்றனர், என் காலத்திற்குமுன்பாக நான் மரிப்பேன், மற்றும் எனது உடலானது புழுக்களுக்கு உணவாக இந்த மண்ணுக்குக் கொடுக்கப்படும். மகா நெப்போலியன் என்று அழைக்கப்பட்ட ஒருவனுடைய முடிவு இப்படிப்பட்டதாகவே இருக்கும். ஆனால் கிறிஸ்துவைக் கண்ணோக்கிப் பாருங்கள், அவர் ஒவ்வொரு நாட்டிலும் கனப்படுத்தப்பட்டு அன்புகூரப்படுகின்றார். அவரது ராஜ்யத்தைப் பாருங்கள், அது மற்ற எல்லா அரசுகளைக் காட்டிலும் உயர்ந்தோங்கி நிற்கிறது. அவரது வாழ்வு ஒரு மனிதனின் வாழ்வாக இருக்கவில்லை; அவரது மரணமும் ஒரு மனிதனின் மரணமாக இருக்கவில்லை, அது தேவனின் மரணமாகவே இருந்தது.*[23]

*தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்று நான் முன்னதாக வலியுறுத்தினேன். அதை இப்போது பெரிய எழுத்தில் எழுதிக் கொள்ளுங்கள்:* **தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார்.**

## *நம்மை இயேசு தமது திட்டத்தில் உள்ளடக்கியிருப்பதால் நாம் வெற்றி அடைகின்றோம் (17:14)*

*இதுவரையிலும் கூறப்பட்ட ஒவ்வொன்றும் மன எழுச்சியுள்ளதாக இருக்கிறது, ஆனுல் கர்த்தர் ஏன் வெற்றி அடைகின்ருர் என்பதே வலியுறுத்தமாக இருந்துள்ளது. "நாம் வெற்றி அடைய ஐந்து காரணங்கள்" என்பதே நமது தலைப்பாக உள்ளது. ஒரு கருத்தில், கடைசி சத்தியமானது மிகவும் மெய்சிலிர்க்கச் செய்வதாக உள்ளது: கர்த்தர் தமது மாபெரும் திட்டத்தில் நம்மை பாகமாக்கியிருப்பதால் நாம் வெற்றி அடைகின்றோம்.*

*ஆண்டவர், "கர்த்தாதி கர்த்தாவும் ராஜாதி ராஜாவுமாக இருப்பதால்" அவர் வெற்றி அடைவார் என்று கூறியபின்பு, இவ்வசனப்பகுதியானது அவர் தனியாய் இருப்பதில்லை*[24] *என்று எடுத்துரைக்கிறது. இது அவரது துணையாளர்களின் பண்பைப் பற்றிக்கூட வரைக்குறிப்பிடுகிறது: "அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்" (வசனம் 14ஈ).*

*இயேசுவுடன் வெற்றியைப் பகிர்ந்து கொள்ள இருப்பவர்களைப் பற்றி இதைவிட அதிகமான சொல்விளக்கமுள்ள விவரிப்பு இருப்பதில்லை என்பது உறுதி. இங்கு பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்கள், கர்த்தர் நமக்குச் செய்துள்ளவை மற்றும் நாம் அவருக்குச் செய்துள்ள பதில்செயல் ஆகிய இரண்டையுமே வலியுறுத்துகின்றன: முதலாவது, நாம்*

‘‘அழைக்கப்பட்டவர்களாய்’’ இருக்கின்றோம். பூமியில் இருக்கையில், இயேசு தமது சீஷர்களை ‘‘என்னைப் பின்பற்றி வாருங்கள்’’ என்ற வார்த்தைகளைக் கொண்டு அழைத்தார் (மத்தேயு 4:19; 8:22; 9:9; 19:21). இன்றைய நாட்களில், நாம் சுவிசேஷத்தினால் அழைக்கப் பட்டிருக்கின்றோம் ( 2 தெசலோனிக்கேயர் 2:14), ஆனால் அறைகூவல் ஒரே மாதிரியானதாகவே நிலைத்திருக்கிறது: “அப்போது இயேசு ... ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் ... என்றார்” (மத்தேயு 16:24). நிருபங்களில் கிறிஸ்தவர்கள் “அழைக்கப்பட்டவர்கள்” என்று குறிப்பிடப்பட்டபோது (ரோமர் 1:6, 7; 1 கொரிந்தியர் 1:24; யூதா 1), அவ்வார்த்தையானது அவர்கள் தேவனுடைய அழைப்பிற்குப் பதில் செயல் செய்துள்ளனர் என்று மறைமுகமாய் உணர்த்துகிறது என்பதை நான் கூடுதலாகக் கூறியாக வேண்டும்.[25]

நாம் ‘‘தெரிந்துகொள்ளப்பட்டவர்களுமாய்’’ இருக்கின்றோம் (2 தெசலோனிக்கேயர் 2:13; 2 தீமோத்தேயு 2:10; தீத்து 1:1; 1 பேதுரு 1:1). இந்த விவரிப்பான சொற்றொடரானது ‘‘அழைக்கப்படுதல்’’ என்ற வார்த்தையுடன் உறவுபட்டுள்ளது, ஆனுல் இது இன்னும் அதிகமான கருத்தைக் கொண்டுள்ளது. தேவனுடைய அழைப்பை புறக்கணிப்ப வர்களைப் பற்றிப் பேசியபோது இயேசு, “அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்” (மத்தேயு 22:14) என்று கூறினார். “தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்” என்பது தேவனுடைய அழைப்பிற்கு நேர்மறையான பதில்செயல் தருவதையும் மறைமுகமாய் உணர்த்துகிறது, ஆனுல் இவ்வார்த்தை, நாம் - நாம் யாராக அல்லது என்னவாக இருக்கின்றோம் என்ற அடிப்படையில் அல்ல (1 கொரிந்தியர் 1:27), ஆனால் அவருடைய உதவியுடன் நாம் என்னவாக இருக்க முடியும் என்ற அடிப்படையில் (கொலோசெயர் 3:12) - தேவனால் “ஒவ்வொருவராக பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கின்றோம்’’ என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது என்ற கருத்தை வலியுறுத்தவே நாம் விரும்புகின்றேன்.

“உண்மையுள்ளவர்கள்” என்பது நிறைவான சொற்றொடராக உள்ளது. முதல் இரண்டு வார்த்தைகள் தேவன்மீது கருத்து வெளிச்சம் வீசுகின்றன; இது நம்மீது கருத்து வெளிச்சம் வீசுகிறது. கர்த்தர் நம்மை அழைத்ததால், மற்றும் தெரிந்து கொண்டதால் நம்மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்; இப்போது நாம், அவருக்குள் மற்றும் அவருடைய ஊழியத்திற்குள் உண்மையாக நிலைத்திருப்பதன்மூலம், நாம் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரராய் இருக்கின்றோம் என்பதைக் காண்பித்தாக வேண்டும். “உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுதல் அவனுக்கு அவசியமாம்” (1 கொரிந்தியர் 4:2; KJV).[26] இந்நேரம் நீங்கள் அனேகமாக வெளிப்படுத்தின விசேஷம் 2:10ஐ மனப்பாடமாக அறிந்திருப்பீர்கள்: “நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, ... .”

# முடிவுரை

வெற்றியைக் குறித்து நாம் தைரியமாய் இருக்க முடிவது ஏன்? நாம் படித்துள்ள வசனப்பகுதியானது குறைந்தது ஐந்து காரணங்களை மறைமுகமாய் உணர்த்துகிறது: (1) இயேசு தமது இரத்தத்தைச் சிந்தியதால்; (2) கடைசியில், பாவம் என்பது சுய அழிவுத்தன்மையுள்ளதாக இருப்பதால்; (3) தேவன் முழுமையான கட்டுப்பாடு செலுத்துவதால்; (4) இயேசு எல்லாருக்கும் ஆண்டவராக இருப்பதால். இந்த முதல் நான்கு காரணங்கள் மாற்றப்பட முடியாதவைகளாய், மாறாதவைகளாய் இருக்கின்றன. இருப்பினும், ஐந்தாவது காரணமானது, உங்களையும் என்னையும் பொறுத்த வரையிலும் இடர்ப்பாடு மிக்கதாக உள்ளது: (5) நம்மை இயேசு தமது திட்டத்தில் உள்ளடக்கியிருப்பதால். இந்த கடைசிக் காரணம் ஒரு மாறிலியைக் கொண்டுள்ளது: இது ''அழைக்கப்பட்டு, தேர்ந்துகொள்ளப்பட்டு மற்றும் உண்மையுடன் இருப்பவர்களுக்கு'' மாத்திரமானதாக உள்ளது.

நம்மில் ஒவ்வொருவரும் சுவிசேஷத்தினால் அழைக்கப் பட்டிருக்கின்றோம், ஆனால், விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாக அந்த அழைப்பிற்கு நாம் பதில் செயல் செய்திருக்கின்றோமா (மாற்கு 16:16; நடபடிகள் 2:38)? தேவன் நம்மை ''இரட்சிப்புக்கென்று'' தேர்ந்துகொள்ள விரும்புகின்றார் (2 தெசலோனிக்கேயர் 2:13), ஆனால் நம்மை உருவாக்கவும் வடிவாக்கவும் அவரை நாம் அனுமதித்து இருக்கின்றோமா? கர்த்தர் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவராய் இருந்திருக்கின்றார் (எபிரெயர் 10:23; வெளிப்படுத்தின விசேஷம் 3:14; 19:11), ஆனால் நாம் அவருக்கு உண்மை யுள்ளவர்களாய் இருக்கின்றோமா (எபேசியர் 1:1; கொலோசெயர் 1:2)? நீங்கள் ''அழைக்கப்பட்டு, தேர்ந்துகொள்ளப்பட்டு, உண்மையுள்ள வர்களாய்'' இராதிருந்தால், 17ம் அதிகாரத்தின் உறுதிப்பாடுகள் உங்களுக்குரியவைகளாய் இருக்க முடியாது. நீங்கள் கர்த்தரிடத்திற்கு நம்பிக்கையுடனான கீழ்ப்படிதலில் வந்து சேர வேண்டியுள்ளது என்றால், இப்போதே அதைச் செய்யுங்கள்.

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

14ம் வசனம், ''அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப் பட்டவர்கள், உண்மையுள்ளவர்கள்'' என்ற வார்த்தைகளின் மீதான அதன் விசேஷித்த வலியுறுத்தத்துடன் ''ஆட்டுக்குட்டியானவர் மூலமாக வெற்றி'' என்ற வசனரீதியான பிரசங்கத்திற்கு அடிப்படையாக இருக்க முடியும். ''அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், உண்மையுள் ளவர்கள்'' என்ற கருத்தின்மீது மாத்திரம் பிரசங்கிக்கவும் நீங்கள் விரும்பலாம். இந்த மூன்று சொற்றொடர்களும் தனித்தனியே தேவனு

*டைய மக்களை விவரிப்பதற்கு எண்ணமுடியாத முறைகள் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன (ஒரு ஒத்தவாக்கிய அகராதியில் காணவும்).*

---

குறிப்புகள்

[1]*"கர்த்தாதி கர்த்தாவும் ராஜாதி ராஜாவும்" என்ற இந்தச் சொற்றொடர், மிகமிகத் தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது.* [2]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 90. [3]*இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "ஒருபோதும் இருந்திராத, ஒருபோதும் இராதிருக்கப்போகிற யுத்தம்" என்ற பாடத்தில் காணவும்.* [4]*"யுத்தம்" என்பதைக் குறிக்கும் மூன்று வசனப்பகுதிகளும், யுத்தத்தைக் குறிப்பதற்கு (*"the" *என்ற ஆங்கில) திட்டவட்டச் சுட்டுச் சொல்லைப் பயன்படுத்துகின்றன, ஆனால் 17:14ல் திட்டவட்டச் சுட்டுச் சொல் எதுவும் இருப்பதில்லை. 17:14ன் மூலவசனத்தினுடைய சொல்வழக்கானது 12:17ஐப் போன்றதாகவே உள்ளது.* [5]*17:14ம் வசனம், அவர்கள் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுபவர்களுடன் அல்ல, ஆனால் ஆட்டுக்குட்டியானவருடனேயே யுத்தம் பண்ணுவார்கள் என்று கூறுகிறதாக எவரொருவரும் மறுத்துரைக்க வேண்டுமென்றால், சாத்தானானவன், கர்த்தருடைய சீஷர்களைத் தாக்குவதன் மூலமாகவே கர்த்தரை எப்போதும் தாக்குகின்றான் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் (நடபடிகள் 8:1; 9:5).* [6]F. W. Farrar, *History's Witness to Christ,* quoted in Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 27-28. [7]*18ம் அதிகாரத்தில் இந்த ராஜாக்கள் ரோமாபுரியின் வீழ்ச்சிகுறித்து அழுவதாகப் பேசப்படுவதால் (18:9, 10) இவர்கள் வசனம் 2ல் கூறப்படும் அதே ராஜாக்கள் அல்ல என்று சிலர் நம்புகின்றனர். இருப்பினும், மனிதர்கள் ஒரு செயலைச் செய்துவிட்டுப் பின்பு, 2 கொரிந்தியர் 7:10 அழைக்கும் வண்ணமாக, "லௌகிக துக்கம்" அடைதல் என்பது மனிதர்களுக்குச் சாதாரணமானதாகவே இருக்கிறது. இந்த ராஜாக்கள் உணர்வற்ற வகையில் மற்றும் திட்டமில்லாமலேயே தங்களுடைய சித்தப்படி செய்வதற்குப் பதிலாகத் தேவனுடைய சித்தப்படி செய்தனர் என்பதைத் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்.* [8]*16ம் வசனத்தை, எசேக்கியேல் 23:1-35ல் உள்ள விரிவான ஒப்புவமையுடன் ஒப்பிட்டுக் காணவும். மேலும் மாற்கு 3:23-26ஐயும் காணவும். நமது தற்போதய வசனப்பகுதியானது, "சாத்தான் தனக்குத் தானே பிரிந்திருக்கும்" நிலைக்கான உதாரணமாக நினைக்கப்படலாம்.* [9]Martin H. Franzmann, *The Revelation to John* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1976), 119. [10]*நிர்வாணமாக்கப்படுதலின் வெட்கக்கேடு பற்றி, நாகூம் 3:5ல் காணவும்.*

[11]*"பட்சித்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "பெருந்திண்டியுடன் போஷித்தல்" என்று அர்த்தப்படுகிறது.* [12]*பழைய ஏற்பாட்டில். மாம்சத்தைப் புசித்தல் என்பது காட்டுத்தனமான விரோதியின் நடவடிக்கையாக இருந்தது (சங்கீதம் 27:2; மீகா 3:3).* [13]*பழைய ஏற்பாட்டில் இது, மிகவும், கொடிய பாவங்களுக்குத் தண்டனையாக இருந்தது (லேவியராகமம் 20:14; 21:9).* [14]*வடிவளவான இந்த வார்த்தைகள், ரோமாபுரியானது ஒவ்வொரு ஆதாரமூலமும் உரிந்து போடப்பட்டதாகும், அது பட்சிக்கப்படும், மற்றும் அது அழிக்கப்படும் என்பதை முன்னுரைத்தன.* [15]*இது ஒரு நகரத்தின் அழிவை விவரித்தாலும், வார்த்தை அமைப்பானது, மனிதகுலத்தைச் சேர்ந்தவர்களின் சிதைவைச் சித்தரிப்பதாகவே*

உள்ளது: அவளது ஆடம்பரமான உடை அவளிடத்தில் இருந்து உரிந்துபோடப்படும்; அவளது உடல் மனிதர்களால் உண்ணப்படும்; அவள் அக்கினியால் பட்சிக்கப்படுவாள். இது, நான் வார்த்தைகளைக் கொண்டோ அல்லது பிரையன் வாட்ஸ்ஸின் சித்திரங்களைக் கொண்டோ விவரிக்க முயற்சி எடுத்துக்கொள்ளாத அளவுக்கு மிகவும் கொடிய காட்சியாக உள்ளது. இந்த விவரிப்பின்மீது நீங்கள் விளக்கம் அளிக்க முடிவு செய்தால், பயங்கரமான இந்த வார்த்தைகள் சோதனையின் கவர்ச்சிகளுக்கு நாம் இணங்கிவிடாதிருக்க எச்சரிப்பதையே நோக்கம் கொண்டுள்ளன என்பதை வலியுறுத்துங்கள், நாம், அவ்வாறு இணங்கிவிட்டால், சோதனைக்காரனுக்கு ஏற்படும் அதே முடிவு நமக்கும் ஏற்படும். [16]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 355. [17]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 225. [18]வெளியில் இருந்து காட்டுத்தனமான படைகள் வருவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே, ரோமாபுரியானது தன்னுள்ளாகவே நொறுங்கிப் போயிருந்தது. [19]"தேவனுடைய வார்த்தைகள்" என்ற சொற்றொடரை, வசனத்தில் உள்ள எந்த ஒரு வாக்குத்தத்தத்திற்கோ அல்லது முன்னுரைத்தலுக்குமோ நடைமுறைப்படுத்த முடியும், ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில், "தேவனுடைய வார்த்தைகள்" என்பது விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது. [20]Philip Edgcumbe Hughes, *The Book of Revelation: A Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990), 188.

[21]Hailey, 356. வேதாகமரீதியில், நாடகத்துவமான இன்னொரு உதாரணத்தை ஏசாயா 10:5-7ல் காணமுடியும். [22]வேதாகமத்தின் வேறொரு இடத்தில், இந்தச் சொல்வழக்கு தேவனுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது (உபாகமம் 10:17; தானியேல் 2:47; 1 தீமோத்தேயு 6:15). இது வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள உண்மையானது, அவரது தெய்வீகத்துவத்தை உறுதிப்படுத்துகிறது. [23]Quoted in David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 36. [24]வெற்றியில் நமது பங்கேற்பு என்பது முன்னதாக 12:11ல் வலியுறுத்தப்பட்டது. "அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், உண்மையுள்ளவர்கள்" என்பவர்கள், கர்த்தருடைய "ஆதாரமூலங்களாக அல்ல, ஆனால் பரிவாரங்களாக இருக்கின்றனர். அவர்கள் உதவிசெய்ய சுயாதீனமான ஆதாரமூலம் எதையும் குறிப்பதில்லை. ஏனெனில் அப்படிப்பட்ட ஏதொன்றும் ஆண்டவருக்குத் தேவைப்படுவதில்லை. மேலே குறிப்பிட்ட தன்மைகளேகூட, அவர்கள் அவரைச் சார்ந்துள்ளனர் என்று காண்பிக்கின்றன. ஆனாலும் அவர்கள் அவரது வெற்றியைப் பகிர்ந்து கொள்கின்றனர்" என்று லியோன் மோரீஸ் என்பவர் குறிப்பிட்டார் (*Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987] 206). [25]"சபை" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்ற நேரடி அர்த்தம் கொண்டதாக இருக்கிறது. [26]மத்தேயு 25:21, 23ஐயும் காணவும்.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. வெளிப்படுத்தின விசேஷத்தின் ‘‘ஆய்வுக்கருத்து வசனமாக’’ உள்ளது 17:14 ஆகும் என்று சிலர் நம்புவது ஏன் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?
2. “நாம் வெற்றி அடைகின்றோம்” என்பதற்கு இந்தப் பாடம், ஐந்து காரணங்களைத் தருகிறது. அவற்றில் முதலாவது காரணம் என்ன? இந்தக் காரணம் எவ்வளவு முக்கியமானதாக உள்ளது?
3. இந்தப் பாடத்தில் தரப்பட்டுள்ள இரண்டாவது காரணம் என்ன?
4. “கூட்டாளிகள்” ஒருவரையொருவர் வெறுத்து ஒருவர் மற்றவரை அழிக்க முயற்சி செய்த அரசியல் கூட்டு உடன்படிக்கை பற்றிய உதாரணங்கள் எதையாவது உங்களால் தரமுடியுமா?
5. 17:16ல் பெண்ணின் அழிவு பற்றிய சித்தரிப்பை ரோமாபுரி நகரத்தின் அழிவுக்கு நடைமுறைப்படுத்தவும்.
6. தரப்பட்டுள்ள மூன்றாவது காரணம் என்ன?
7. “தேவன் ... அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கு ... அவர்களுடைய [ராஜாக்களுடைய] இருதயங்களை ஏவினார்” (17:17) என்ற சிந்தனையைத் தூண்டும் கூற்றைப் பற்றிக் கலந்துரையாடவும்.
8. தேவன் நாடுகளைக் கட்டுப்படுத்துகின்றார் என்பதற்கு பாடத்தில் தரப்பட்டுள்ள உதாரணங்கள் பற்றிக் கலந்துரையாடவும். வேதாகமரீதியான மற்ற உதாரணங்களைப் பற்றி உங்களால் நினைக்க முடிகிறதா?
9. “நாம் வெற்றி அடைவதற்கு” நான்காவது காரணம் என்ன?
10. இயேசு “கர்த்தாதி கர்த்தாவாக, ராஜாதி ராஜாவாக” இருக்கின்றார் (17:14) என்ற உண்மை, உங்கள் மீது தனிப்பட்ட வகையில் எவ்வாறு செயல்விளைவு செய்ய வேண்டும்?
11. இந்தப் பாடத்தில் தரப்பட்டுள்ள ஐந்தாவது காரணம் என்ன?
12. ‘‘அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், உண்மையுள்ளவர்கள்’’ என்ற சொற்றொடரின் அர்த்தம் பற்றிக் கலந்துரையாடவும். இவ்வார்த்தைகள் உங்களை விவரிக்கின்றனவா? இல்லையென்றால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?